# மனிதனுடைய மரணத்திற்குப் பின்பு

மனிதனுடைய மரணத்திற்குப் பின் என்ன நடக்கிறது ? மரணத்திற்குப் பின் வாழ்க்கை உண்டா? என்று காலங்காலமாக நாகரிகமடைந்த ஒவ்வொரு சமுதாயத்தில் உள்ள அறிவு மேதைகள் இந்தக் கேள்வியைக் குறித்து நிறையவே யோசித்து வருகிறார்கள். ஆனால் மனித தத்துவங்களிலிருந்தும், விஞ்ஞான ஆராய்ச்சிகளிலும் எண்ணிலடங்காத கோட்பாடுகளும், கட்டுக்கதைகளும்தான் மிஞ்சியிருக்கின்றன. இதை அறிந்து கொள்ளும் சக்தி என்பத சித்தாகளுக்கும், ஞானிகளுக்கும் முனிவா்களுக்கும் உடையது என்பதை நாம் அனைவரும் அறிய வேண்டும்.

**நமக்கு இரண்டு உடல்கள் உள்ளன. நமக்குத் தெரிந்த இந்த பூத உடல் ஒன்று. மற்றொன்று நமது கண்களுக்கு புலப்படாத சூட்சமஉடல் ஆகும். நாம் இறந்த பின்பு நாம் ஏதோ ஒரு உலகுக்குப் பயணிக்கிறோம்.**

**நமது அன்றாட வாழ்வில் நாம் செய்யும் நன்மைகளுக்கும், தீமைகளுக்கு ஏற்ப சொர்க்கமோ, நரகமோ செல்கிறோம் என்பது நமது நம்பிக்கை. எனவே மரணத்திற்கு பின் ஒரு வாழ்க்கை உண்டு என்பதை நாம் அறிய வேண்டும்.**

**மரணம்தான் என்பது முடிவல்ல. நாம் செய்யும் க்ர்மவினைப் பயன்படியே அனைத்தும் நடக்கும். நாம் மரணத்தை வெல்வதற்கு நம் முன்னோர்களான சித்தர்கள் பாடிச் சென்ற பாடல்களை படித்தும் அதை நாம் உணர்ந்தும் அவா்கள் கூறிய அறிவுரைகளை கடைப்பிடித்து, அவா்களால் வழங்கப்பெற்ற நல்ல கருத்துகளையும், பண்புகளையும் கடைபிடிப்போம் என்றால் நாம் மரணத்தை வெல்லலாம்.**

**மரணத்திற்குப் பின் என்ன என்பதை அறிந்து கொள்ள பல அறிவியல் விஞ்ஞானிகள் முயற்சி செய்து வருகிறார்கள். அவா்கள் இதுவரையிலும் எதைக் கண்டுபிடித்து இந்த உலகத்திற்கும் நமக்கும் சரியாக கூறினார்கள்? இன்றுவரை தெளிவான விளக்கங்கள் இல்லை என்றுதான் நான் கூறுவேன்.**

## இதில் பிரபல விஞ்ஞானி ஸ்டீபன் ஹாக்கிங் கூறியதாவது

மூளை உயிருடன் இருக்கும் வரைதான் எல்லாமே. அது செயலிழந்துவிட்டால் அனைத்தும் முடிந்து போய்விடும். அதன் பிறகு எதுவுமே கிடையாது என்று கூறியுள்ளார். அவர் நான் கடந்த 49 வருடங்களாக மரணத்தை ஏமாற்றிக் கொண்டிருக்கிறேன். எனக்கு மரண பயம் என்பது சுத்தமாக இல்லை. ஆனால் மரணிக்க நான் அவசரப்படவில்லை. நான் நிறைய சாதிக்க ஆசைப்படுகின்றேன். பல விஷயங்களை நான் இன்னும் கற்றுக் கொள்ளவே இல்லை. அதையெல்லாம் செய்ய வேண்டும் மூளையே ஒரு கணினி போலத்தான். எப்படி கணினியில் உள்ள சாதனங்கள் செயலிழந்து விட்டால் அது செயலிழந்து போகுமோ அது போலத்தான் மூளையும், மூளை செயலிழந்துவிட்டால் அவ்வளவுதான் அனைத்தும் முடிந்துவிடும். அதன் பிறகு எதுவுமே இல்லை. மரணம்தான் இறுதியானது. சொர்க்கமும் கிடையாது, நரகமும் கிடையாது, மறு பிறவியும் கிடையாது. மரணத்திற்குப் பின் வாழ்க்கை இல்லை. மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கை என்பது கற்பனையானது, கட்டுக்கதை அது. மரண பயத்தைப் போக்க புகுத்தப்பட்ட கதைகள் அவை எனக் கூறியுள்ளார்.

ஆனால், நாம் ஒன்றை நன்றாக கவனிக்க வேண்டும். சித்தர்கள், அவர்கள் பாடல் வரிகளில் நன்கு தெளிவாக கூறியுள்ளனர். உடல் என்பது அழிந்து போகக் கூடியது. இந்த உடலுடன் வரும் அனைத்து உறுப்புகளுமே அழியக் கூடியவைகளாகும். அந்தப் பாடலைப் பற்றி நான் மேலே கூறியுள்ளேன்.

**மனித உடல் என்பது இரண்டு வகைப்படும். மனித உடல் வேறு. மனித உயிர் வேறு. மனித உடல் என்பது அழியக் கூடிய பொருளாகும். மனித உயிர் என்பது ஆன்மா என்று பொருள். அது நம்முடைய மரணத்திற்குப் பின் இந்த ஆன்மாவானது இறைவனை சென்றடைகிறது. இதை நம்மால் உணர முடியாது. இது ஒரு சூட்சுமம் ஆகும். சித்தர்கள் மட்டுமே அறியக்கூடிய ஒன்றாகும். இவ்வுலகில் இந்த மனித உடம்பும், மனித வாழ்வுமே இறைவனை காணுவதற்குரிய ஒப்பற்ற சாதனங்கள் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். அதற்கான தேடுதல்களை நாம் தொடங்க வேண்டும்.**

**மரணத்தை வெல்வது என்பது சித்தர்களின் முக்கியப் பண்பாடு. ஒரு பொருளை இன்னொரு பொருளாக மாற்றுவதும், கூடு விட்டு கூடு மாறும் திறனும், உருமாறுவதும் சித்தர்கள் சாதனையில் முக்கியமானவைகளாகும். சித்தர்கள் தங்கள் சாதனையை காய சாதனை என்றனர். அதன்மூலம் காயசித்தி எனும் தேகத்தை பூரணத்துவம் அடையச்செய்வது அவர்கள் நோக்கம் ஆகும். மரணமிலா பெருவாழ்வு வாழ்வதும்.**

சித்தர்கள் தந்துள்ள சான்றுகள், அவர்கள் தந்துள்ள விளக்கங்கள், தந்துள்ள முறைகள் இவைகளைப் பின்பற்றினால் நாமும் அடுத்த நிலையை நோக்கி நகரலாம்.

**<u>மரணம் வருவதை முன் கூட்டியே அறிதல் எப்படி ?</u>**

**நாக்குச் சிவந்து முன்பிறந்த**
**நன்னீரி விதம்போல் சிவந்திருக்கும்**
**தேக்கிக் காயும் தாகமுண்டு**
**தெளிந்தே வேர்வு சிகமென்னே**
**உளக்கி உடலும் நொந்திருக்கும்**
**உலகோர் அறிய உரைத்தோம்**
**நாம் பாக்குத் தின்னும் துவர்**
**வாய் புரிந்தே நாளும் ஏலேன்னே!!!**

**<u>இதன் விளக்கம் :</u>**

நாக்குச் சிவந்து மூளைக் கட்டுகள் முள்போலதோன்றி இரத்தம் போலச் சிவந்திருக்கும். காய்ச்சல் குறையாமல் தகிக்கும். அளவுக்கதிகமாக தாகம் இருக்கும். உடல் வியர்க்கும். உடல் முழுவதும் வலிப்பது போல் இருக்கும். பாக்குத் தின்பது போல் நாக்கில் துவர்ப்புச்சுவை தெரியும். இந்த அறிகுறிகள் தெரிந்தால் ஏழுநாளில் உயிர் துறப்பார்கள் என்று உலகத்தவர்கள் தெரிந்து கொள்ள நான் சொல்கிறேன் என்பது சித்தர் கூறிய வரிகள் ஆகும்.